# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 86/2018

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆறுமுகம் | மதம் | : |
| த/பெ | : புச்சிகான் | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**22.07.2024**

**<u>வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு 2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு பூர்வீகம் எந்த ஊர் என்றால் காவேரிராஜபுரம் ஆகும். வழக்கு சொத்து சர்வே எண். தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் முழு விஸ்தீரணம் தெரியுமா என்றால் 57 செண்ட் ஆகும். தாவா சொத்து விவசாய நிலம் என்றால் சரிதான். விவசாய நிலத்தில் வீடு கட்ட கூடாது என்றால் வீடு கட்ட இடமில்லை என்றுதான் அவரிடம் வாங்கினோம். தாவா சொத்தின் கிழக்கு பக்கம் எங்களுக்கு பூர்வீகமான வீடு உள்ளது என்றால் தாவா சொத்தின் வடக்கு பக்கம் உள்ளது. பூர்வீக வீடு எனக்கும் என் அண்ணன் பெரியப்பனுக்கும் தனித்தனியாக உள்ளது என்றால் சரிதான்.

2. பூர்வீக வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. அது கிராம நத்தம் ஆகும். தாவா சொத்தில் கிணறு உள்ளது என்றால் அது ஒரு மூலையில் உள்ளது. வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் பட்டா வேண்டுமென்று தாக்கல் செய்துள்ளோம். பட்டா கேட்டு தாசில்தார் அலுவலகத்தில் மனு செய்தோமா என்றால் சொத்து சாமிக்கன் பெயரில் உள்ளது என்பதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். நான் பட்டா மாறுதலுக்கு நான் மனு செய்தேனா என்றால் மனு செய்தேன். அந்த மனு நகலை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்திருப்பேன்.

3. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் சாமைய்யா பெயரில் இருந்தது. சாமைய்யாவிற்கு எத்தனை வாரிசு என்றால் 1. சித்திரை, 2. கொள்ளாபுரி, 3. அரசன் ஆகியோர் ஆகும். சாமைய்யாவின் வாரிசு சான்றிதழ், இறப்பு சான்றிதழ் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சாமைய்யாவிற்கு 1. சித்திரை, 2. கொள்ளாபுரி, 3. அரசன் 4. பொன்னன் ஆகிய 4 பேர் என்றால் 3 பேர் தான். சாமைய்யாவிற்கு பொன்னன் என்ற வாரிசு இருப்பது எனக்கு தெரியாது என்றால் என்னிடம் துரைராஜ் 3 வாரிசு என்றுதான் சொன்னார்.

4. சொத்து வாங்குவதற்கு முன்பு வில்லங்க சான்று வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. நான் சொத்தை 1991ல் வாங்கும்போது பட்டா, சிட்டா, அடங்கல் வாங்கிப் பார்த்தேனா என்றால் தாலுகா அலுவலகம் சென்று பார்த்தபோது சாமைய்யா பேரில் இருந்தது. சாமைய்யா பெயரில் இருந்த பட்டா எண் சொல்ல முடியுமா என்றால் ஞாபகமில்லை. துரைராஜுக்கு சொத்து எப்படி வந்தது என்றால் அவரது அப்பா சித்திரையின் மூலமாக வந்தது. எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 1. சித்திரை, 2. கொள்ளாபுரி, 3. அரசன் வாய் மொழியாக பாகம் பிரித்ததாக சொல்லியிருப்பதில் அதற்கான ஆவணம் எதையும் பார்த்தேனா என்றால் குலுக்கு சீட்டு எழுதிப்போட்டு யார் யாருக்கு எந்த சொத்து என முடிவு செய்ததாக துரைராஜ் என்னிடம் சொன்னார்.

5. குலுக்கு சீட்டு எழுதிப்போட்டு யார் யாருக்கு எந்த சொத்து என முடிவு செய்த பின்பு கூர் சீட்டு எதுவும் எழுதினார்களா என்றால் நான் பார்க்கவில்லை. எனது கிரைய ஆவணத்தில் "குலுக்கு சீட்டு எழுதிப்போட்டு யார் யாருக்கு எந்த சொத்து என முடிவு செய்து அதன்படி பாகத்தில் கிடைத்து நான் அனுபவித்து வரும்" என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எழுதியவர் அவ்வாறு எழுதியிருப்பார். எனக்கு தெரியவில்லை. தாவா சொத்திற்கும் துரைராஜுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் அவருக்கு தாவா சொத்தை கிரையம் கொடுக்க எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. துரைராஜுக்கு உரிமையில்லாத சொத்தை எழுதிக் கொடுத்து இருப்பதால்

வா.சா.ஆ 1 ஆவணம் சட்டப்படி செல்லத்ததக்கது அல்ல என்றால் சரியல்ல.

6. தாவா சொத்து சம்பந்தமாக அரசனுக்கு என் அப்பா துரைராஜுக்கும் நடந்த வழக்கில் அரசனுக்கு சாதகமாக தீர்ப்பான விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அதன் அசல் வழக்கு எண்.616/1989 என்றால் தெரியாது. நான் சொல்வது போல் சாமைய்யாவின் சொத்தை பாகம் பிரித்து இருந்தால் அப்போதே பட்டா மாற்றியிருப்பார்கள் என்றால் சரியல்ல. நான் 1991 ல் சொத்து வாங்கிய பின்பு என் பெயரில் பட்டா மாற்றவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சாமைய்யாவின் அனைத்து வாரிசுகளுக்கும் சொத்தில் பாகம் இருந்திருந்தால் சொத்தில் கூட்டு பட்டா வந்திருக்கும் என்றால் சரியல்ல.

7. தாவா சொத்து சாமைய்யாவிற்கு பாத்தியமாக இருந்திருந்தால் அவரது அனைத்து வாரிசுகளிடமும் சொத்தை எழுதி வாங்கியிருக்க வேண்டும் என்றாலும் துரைராஜிடம் மட்டும் எழுதி வாங்கியது செல்லாது என்றாலும் சரியல்ல. நான் துரைராஜை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றாலும் சரிதான். அவர் இறந்துவிட்டதால் வழக்கில் சேர்க்கவில்லை. தாவா சொத்து அரசனுக்கு ஒதுக்கப்பட்டு 1945 ல் இருந்து அவர்தான் அனுபவித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. துரைராஜ்தான் அனுபவித்து வந்தார் என்பதைக் காட்ட சிட்டா, அடங்கல் வாங்கி தாக்கல் செய்தேனா என்றால் சாமைய்யா பெயரில் உள்ள ஆவணங்களைதான் வாங்கி தாக்கல் செய்துள்ளேன்.

8. சாமைய்யா பெயரில் உள்ள எந்த ஆவணங்களும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அரசன் இறந்த பின்பு அவரது மனைவி கிளியம்மாள், மகள் தேவி பெயரில் உள்ள பட்டாவைதான் வா.சா.ஆ 5 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 2 வரி ரசீது 196A ஆனது எங்களது பூர்வீக வீட்டின் வரி ரசீது என்றால் இல்லை. என் அண்ணன் அவரது வீட்டின் வரி ரசீதுகளின் 196B என அ.வ.எண்.85/2018 ல் தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள மின் கட்டண ரசீதுகளும் எனது பூர்வீக வீட்டின் ரசீதுகள் என்றால் இல்லை. மின் கட்டண அட்டையில் கதவு எண்

குறிப்பிடப்படவில்லை என்றால் எங்கள் வீட்டிற்கு கதவு எண்ணே இல்லை.

9. சாமைய்யாவின் வம்சாவழி பட்டியலில் பொன்னை காட்டாததால் நான் தாக்கல் செய்துள்ள வம்சாவழி பட்டியல் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை வாங்கிய பின்பு தாக்கல் செய்த பட்டா மாறுதல் மனு என்ன ஆனது என்றால் நான் அதன் பின்பு போகவில்லை. எனது பட்டா மாறுதல் மனு ஏற்புடையது அல்ல என்று நிராகரித்துவிட்டார்கள் என்றால் சித்திரை பெயரில் கூட்டு பட்டா கொடுப்பதாக சொன்னார்கள் நான் அதன்பின்பு போகவில்லை. நான் வாங்கவில்லை. 1974 ல் இருந்தே அரசன் பெயரில்தான் பட்டா உள்ளது என்றும் அதனால்தான் அவரது மனைவி, மகள் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டது என்றால் அவர்கள் பெயரில் பட்டா இருந்திருந்தால் நான் கிரையம் வாங்கிய போதே ஆட்சேபணை செய்திருக்கலாம். தாவா சொத்து அரசன் மற்றும் அரசனின் வாரிசுகளுக்கு மட்டும்தான் முழு உரிமையுள்ளது என்றாலும் துரைராஜுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் அதனால் நான் கிரையம் வாங்கிய ஆவணம் சட்டப்படி செல்லத்ததக்கது அல்ல என்றாலும் அதன்மூலம் எனக்கு எந்த உரிமையும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

10. தாவா சொத்து என்ன மதிப்பு பெறும் என்றால் 2 லட்சம் மதிப்பு பெறும். தாவா சொத்து 2 லட்சத்திற்கு மேல் மதிப்பு பெறும் என்பதால் இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலைநிற்கத்தக்கது அல்ல என்றாலும் உரிய நீதிமன்றத்தில்தான் தாக்கல் செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)